செ.வெ. எண்: 176 நாள்:03.03.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.3.2012) தலைமைச் செயலகத்தில், சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் 17 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 126 புதிய குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

பொதுப் பணித் துறை பொறியாளர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் 17 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 126 புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. அலுவலக உதவியாளர் மற்றும் ஒட்டுநர்களுக்கான குடியிருப்பு கட்டடம் தரைதளம் மற்றும் ஒன்பது மேல்தளங்களைக் கொண்டது. ஒவ்வொரு தளமும், பத்து குடியிருப்புகளைக் கொண்டது.

தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கான குடியிருப்பு கட்டடம், தரைத்தளம் மற்றும் ஆறு மேல்தளங்களைக் கொண்டது. ஒவ்வொரு தளத்திலும் ஒரு தலைமைப் பொறியாளர் குடியிருப்பு மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் குடியிருப்புக்களைக் கொண்டதாகக் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்புகளிலும் நுழைவு அறை, வரவேற்பறை, உணவு அறை, குடும்ப அறை, மூன்று படுக்கை அறைகளில் இரண்டு இணைப்பு கழிப்பறைகளும், ஒரு பொதுக் கழிப்பறையும், அமரும் அறை, சமையல் அறை, பயன்பாட்டு அறை, பண்டக அறை மற்றும் உதவியாளர் அறை ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளன. செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கான குடியிருப்பு கட்டடம், தரைத்தளம் மற்றும் எட்டு மேல்தளங்களைக் கொண்டது. ஒவ்வொரு தளத்திலும் தலா ஒரு செயற் பொறியாளர் / உதவி செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் குடியிருப்புக்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு குடியிருப்பிலும் வரவேற்பறை, உணவு அறை, இரண்டு படுக்கை அறைகள், இரண்டு கழிப்பறைகள், சமையல் அறை, அமரும் அறை, பயன்பாட்டு அறை ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளன. செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் குடியிருப்பில் மேலும் ஒரு படுக்கை அறை, கழிப்பறை வசதி கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய குடியிருப்பு கட்டடங்கள் அடிப்படை வசதிகளுடன், மின் தூக்கிகள், தீயணைப்பு வசதி, இடிதாங்கி மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகளை கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. 126 குடியிருப்புகள் கொண்ட இப்புதியக் கட்டடங்களை இன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி (Video conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பொதுப் பணித் துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.